சுதந்திரப் போராட்ட
வரலாற்று நூல் வரிசை - 4

தமிழகத்தில் கிலாஃபத் இயக்கம்

வரலாற்றாய்வாளர்
செ. திவான் M.A., M.Phil.,

ILAKKIYACHOLAI
இலக்கியச்சோலை

வெளியீட்டு எண்: 150

தமிழகத்தில் கிலாஃபத் இயக்கம்

வரலாற்றாய்வாளர்

செ. திவான் M.A., M.Phil.,

இலக்கியச்சோலை
26,பேரக்ஸ் சாலை, பெரியமேடு
சென்னை - 600 003

தமிழகத்தில் கிலாஃபத் இயக்கம்

வரலாற்றாய்வாளர்

செ. திவான் M.A., M.Phil.,

ஆகஸ்ட் 2020 | 32 பக்கங்கள் | ₹25.00

இலக்கியச்சோலை
26, பேரக்ஸ் சாலை, பெரியமேடு
சென்னை - 600 003

© இலக்கியச்சோலை

Thamizhagathil Kilafath Iyakkam

Se. Diwan

First Edition | August 2020

32 Pages | Price Rs. 25.00

Ilakkiyacholai
26, Barracks Road, Periyamet
Chennai - 600 003 Cell: 99629 18724
ilakkiyacholai@gmail.com

© Ilakkiyacholai

பதிப்புரை

நீண்ட நெடிய இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் பலரின் பங்களிப்புகள் இருப்பதை மறுக்க முடியாது. தேசத்திற்காக தங்களின் உயிர் மற்றும் உடைமைகளை தியாகம் செய்த அந்த வீரர்களின் வீர வரலாறுகள் வரலாற்றின் பக்கங்களில் கட்டாயம் பதிவு செய்யப்படவேண்டும்.

சுதந்திரப் போராட்டத்திற்காக முக்கியமான பங்களிப்பை வழங்கியவர்களில் அலி சகோதரர்கள் முதன்மையானவர்கள். அவர்கள் குறித்த விரிவான தகவல்களை ஏற்கனவே இலக்கியச்சோலை 'இந்திய சுதந்திரப் போரில் இரு சகோதரர்கள்' என்ற நூல் வழியாக வழங்கியுள்ளது. அலி சகோதரர்கள் தொடங்கிய கிலாஃபத் இயக்கத்திற்கும் தமிழகத்துக்குமான தொடர்பை இச் சிறிய நூல் வழங்குகிறது. கிலாஃபத் இயக்கம் முஸ்லிம்களால் தொடங்கப்பட்டது என்றாலும் இந்து சமூகத்தைச் சார்ந்தவர்களும் பிரதான பங்கை ஆற்றி உள்ளார்கள். கிலாஃபத் இயக்கமும் காங்கிரஸ் இயக்கமும் இணைந்து பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளது. இந்து முஸ்லிம் ஒற்றுமை இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கவனிக்கப்பட வேண்டிய அம்சம் ஆகும். தற்போதும் அதன் தேவை அவசியமாகிறது.

வரலாற்றை விரிவாக பதிவு செய்யும் வரலாற்றாய்வாளர் செ. திவான் அவர்களின் மற்றுமொரு நூலை கொண்டு வருவதில் இலக்கியச்சோலை பெருமிதம் கொள்கிறது. அல்லாஹ் அவர்களின் நேரம் மற்றும் அறிவில் அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொடுப்பானாக!

எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே! குறைகள் எங்களைச் சாரும், நிறைகள் எல்லாம் நிறைந்த இறைவனைச் சாரும்.

வாசகர்களின் ஆதரவையும் ஆலோசனைகளையும் தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.

குறைகள் அனைத்தும் எங்களை சாரும்; நிறைகள், குறைகள் ஏதுமற்ற அல்லாஹ்வை சாரும்.

இவண்
மு. முஹம்மது இஸ்மாயீல்
காப்பாளர்
இலக்கியச்சோலை சாரிடபிள் டிரஸ்ட்

தமிழகத்தில் ‘கிலாஃபத் இயக்கம்’

அகிலத்தில் நடைபெற்ற முதல் உலகப் போருக்கு முன்பும் பின்புமான காலகட்டத்தில் வெகுஜனக் கிளர்ச்சியானது எங்கும் வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது. பிரிட்டிஷ் அரசப் பிரதிநிதி செம்ஸ்போர்டு சொன்னதுபோல கி.பி. 1916 வாக்கில் இந்தியா முற்றிலுமாக உறிஞ்சப்பட்டு இருந்தது. (B.B. Tomlinson, India and the British Empire 1880 - 1935, Page 849) முதல் உலகப் போரின்போது பத்து இலட்சத்துக்கும் அதிகமான இந்தியப் போர்வீரர்கள் அயல்நாடுகளில் பணியில் சேர்க்கப்பட்டார்கள். இராணுவத்திற்கு ஆள் எடுக்கவும், போர் நிதிக்குப் பங்களிக்கும்படியும் பொதுமக்கள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.

1917இல் நூறு மில்லியன் பவுண்டும், 1918இல் 45 மில்லியன் பவுண்டும், மக்களிடமிருந்து ‘மனமுவந்த நன்கொடை’ என்ற பெயரில் பெற்றது, புதிய வெள்ளிக்காசுகளைப் பெருமளவில் தயாரித்தது; போர்க்கடன்களுக்கு ஒப்பந்தம் செய்தது, 1916 –1917இல் 16% 1917–1918இல் 14% 1918–1919இல் 10% அதிக வருவாயை பிரிட்டிஷ் இந்திய அரசு திரட்டியது என்பார் டாம்லின்சன். (முற்கூறிய நூல்)

1914இல் இருந்த விலைகளைப் போல மூன்று மடங்காக விலைகள் அதிகரித்திருந்தது. அதே வேளையில் கூலியோ கடுமையாகக் குறைந்திருந்தது என்கிறார் Dr. காட்கில். (Dr. Gadgil, The Industrial Evolution of India in Recent Times, Page 337)

1918இல் தோன்றி 1919இலும் 1920இலும் நாட்டை ஒரு கலக்கு கலக்கிய வேலை நிறுத்த இயக்கம் மலைப்பூட்டும் வகையில் அடர்ந்திருந்தது. 1919 ஜனவரியில் பம்பாயில் (மும்பை) மில்களில் பணிபுரிந்த 1,25,000 தொழிலாளர்கள் வெளியேறினர். அதன்பின் ரவுலட் சட்டங்களை எதிர்த்து நடைபெற்ற முழு அடைப்பு (ஹர்த்தால்) விடுதலைப் போராட்டம் தொழிலாளர்களின் முன்னணிப் பங்கினை

வெளிப்படுத்தியது. வேலை நிறுத்த அலை 1919 முடிவிலும், 1920 முற்பாதியிலும் உச்சிக்கு ஏறியது. ஆர்.கே. தாஸ் எழுதிய இந்தியாவில் தொழிலாளர் இயக்கம் என்ற 1923இல் வெளிவந்த நூலில் பக்கம் 36–37ல் இருந்து ரஜினி பாமிதத் நீண்ட பட்டியலைத் தருவார். (R.K.Das, The Labour Movement in India) சென்னையில் 17000 தொழிலாளர்கள் வேலையிலிருந்து வெளியேறினர். 1920 இன் முதல் ஆறு மாதங்களில் 15 இலட்சம் தொழிலாளர்கள் கலந்து கொண்ட 200 வேலை நிறுத்தங்கள் நடந்தன என்று அதில் குறிப்பிடுவார்.

(ரஜினி பாமிதத், இன்றைய இந்தியா, சென்னை 1978, தமிழாக்கம் எம்.வி. வெங்கட்ராம், பக்கம் 501)

கிலாஃபத்

'கிலாஃபத்' என்பதும் 'இமாமத்' என்பதும் ஒரே பொருளைக் கொண்ட இரண்டு அரபுச் சொற்களாகும். நபிமொழித் தொகுப்புகளில் 'அகாயிது' என்னும் இஸ்லாமியக் கோட்பாடுகளை விளக்கும் நூற்களிலும் இவ்விரு சொற்களும் ஒரே பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் அனைவரும் கீழ்ப்படிந்து நடப்பது அவசியமான ஓர் ஏகபோக அதிகார உரிமை. 'ஷரஹுல்மவாஹிப்' என்னும் நூலில் கிலாஃபத் என்பதற்கு மக்களைப் பாதுகாப்பதிலும் மார்க்கத்தை நிலைபெறச் செய்வதிலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரதிநிதியாக விளங்கும் ஒரு பதவி என்றும் 'ஷரஹுல் மகாஸிது' நூலில் இலௌகீக பாரமார்த்திக விஷயங்களில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட ஓர் அதிகாரப் பதவி என்றும் விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

இந்திய முஸ்லிம்கள் அனைத்து இஸ்லாமிய இயக்கத்தை இந்நாட்டில் தோற்றுவிக்க எடுத்த முயற்சி வெற்றிபெறவில்லை. பல நாடுகளில் வாழுகின்ற இஸ்லாமியர் ஒன்றுபட வேண்டும். ஒருவர் நலனில் மற்றவர் அக்கறை கொள்ள வேண்டும் என்று விரும்பினார். கலீபா, உலக முஸ்லிம் தலைவராகக் கருதப்பட்டவர். இந்திய முஸ்லிம்களும் கலீபாவை தங்களது தலைவராக ஏற்றுக் கொண்டனர்.

நேச நாடுகளுக்கு எதிராகப் போரில் துருக்கி இறங்கியது. ஜெர்மனிக்கு ஆதரவாக பிரிட்டனுக்கு எதிராக துருக்கி

போரிட்டது. இந்திய முஸ்லிம்களது நிலை இக்கட்டுக்குள்ளாகியது. பிரிட்டிஷ் முஸ்லிம்களின் ஆதரவைப் பெற வாக்குறுதிகளை வழங்கினார் பிரிட்டிஷ் பிரதமர் லாயிட் ஜார்ஜ் (Lloyd George). துருக்கி அனுதாபத்துடன் கவனிக்கப்படுமென்றும் துருக்கிய மக்கள் வாழ்கின்ற ஆசியா மைனர் திரேஸ் போன்ற துருக்கியப் பகுதிகளை கைப்பற்றுவது நேசநாடுகளின் நோக்கமல்ல என்றும் கூறினார். 5.1.1918 அன்று அவர் துருக்கிக்குச் சொந்தமாக உள்ள புனித தலங்களுக்கு எதிராக எதுவும் செய்யப்படமாட்டாதெனவும் துருக்கிப் பேரரசு பாதுகாக்கப்படும் என்றும் உறுதி கூறினார். அமெரிக்க ஜனாதிபதியும் எது நடந்தாலும் துருக்கியின் சுதந்திரத்திற்கும் பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் எவ்வித ஊறும் விளையாது என்று வாக்களித்தார். (பா. மாணிக்கவேலு, இந்திய தேசிய இயக்கத்தின் வரலாறு சென்னை, 1977, பக்கம் 93)

இந்த வாக்குறுதிகளை நம்பி இந்திய முஸ்லிம்கள் போர் முயற்சிகளில் இறங்கினர். துருக்கியரை எதிர்த்து முழுமூச்சுடன் போராடினர். ஆனால் போர் முடிந்தது. ஆங்கிலேயர் அள்ளி வீசிய வாக்குறுதிகள் ஆகாயத்தில் பறந்தன.

‘திரேஸ்’, கிரீஸிற்கு வழங்கப்பட்டது. ஆசியப் பகுதிகளை பிரிட்டனும் பிரான்சும் பங்கிட்டன. மெசபடோமியா, அரேபியா, சிரியா, பாலஸ்தீனம் போன்ற ஆசியப் பகுதிகளாவது கலீபாவின் நேரடி ஆதிக்கத்தில் இருக்க வேண்டுமென்பது போன்ற எதுவும் நடக்கவில்லை. இந்திய முஸ்லிம்களின் கோரிக்கை மற்றும் நம்பிக்கை நாசமானது. பிரிட்டிஷாரின் நம்பிக்கைத் துரோகத்தைக் கண்டு முஸ்லிம்கள் ஆத்திரமடைந்தனர். வெள்ளையரின் செய்நன்றி கொன்ற செயலை எதிர்த்துப் போராடத் தீர்மானித்தனர். கலீபாவின் நலனைக் காத்திட கிலாஃபத் இயக்கம் உருவானது.

முதல் உலகப்போர் துவக்கப்பட்டபோது இருந்த நிலையில் துருக்கியப் பேரரசின் எல்லைகள் பாதுகாக்கப்படவும், முன்போலவே துருக்கிய சுல்தானின் ஆட்சி அதிகாரம் மற்றும் சமயத் தலைமை உறுதி செய்யப்படவும் இந்திய முஸ்லிம்கள் எழுந்தனர். விளைவு கிலாஃபத் இயக்கம் உருவாயிற்று.

அகில இந்திய கிலாஃபத் குழு

கிலாஃபத் இயக்கத்தை வழிநடத்த 'அகில இந்திய கிலாஃபத் குழு' (ALL India Khilafat Committe) 'ஜமாத்அல் உலமா இ ஹிந்த்' (Jamat al-ulama-e-Hind) இரு அமைப்புகள் உருவானது. புகழ்பெற்ற அலி சகோதரர்கள் சிறையில் இருந்தனர். அந்த வேளையில் பெரும் செல்வந்தரான வணிகர் முகமது சொட்டானி (Mohammed Jan Chotani M.M. Chotani) யைத் தலைவராகக் கொண்ட கிலாஃபத் குழு 1919 மார்ச் 20இல் பம்பாயில் (மும்பை) அமைக்கப்பட்டது. அதன் கிளைகள் இந்தியா முழுவதும் துவங்கப்பட்டன. கிலாஃபத் குழு அரசியலையும், ஜமாத் அமைப்பு சமயத்தையும் வலுப்படுத்தியது. (Gailminault, The Khilafat Movement, Religious Symbolism and Political Mobilisation in India, Delhi, 1982, Page 81)

21.9.1919இல் லக்னோவில் முதல் கிலாஃபத் மாநாடு நடைபெற்றது. 17.10.1919இல் நாடு முழுவதும் கிலாஃபத் தினம் கொண்டாடப் பெற்றது. 23.11.1919, 24.11.1919 நாட்களில் டில்லியில் கல்கத்தாவைச் சேர்ந்த ஏ.கே.பசுலுல்ஹக் (Fazlul Haq) நீண்ட உரையாற்ற கிலாஃபத் கமிட்டி கூட்டம் நடைபெற்றது. 28.12.1919இல் முகம்மது அலி சிறையிலிருந்து விடுதலையாகி அமிர்தசரஸ் காங்கிரசிற்குச் சென்றார். பின்னர் 01.02.1920 முதல் 13.10.1920 வரை கிலாஃபத் தூதுக் குழுவில் இலண்டன் சென்றார். 1921இல் சென்னையில் கிலாஃபத்தை ஆதரித்து உரையாற்றினார்.

மௌலானா யாகூப் ஹசன்

மௌலானா யாகூப் ஹசன் (இஸ்லாமிய மார்க்க அறிஞர்) நாக்பூரில் 1875 இல் பிறந்தார். (முகமதியன் கல்லூரி) அலிகர் பல்கலைக்கழகத்தில் பயின்றார். 1901இல் சென்னைக்கு வந்து சேர்ந்தார். கிலாஃபத்தில் தீவிரப் பங்காற்றினார். 1916–1920 வரை தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினராக பணியாற்றினார். 1919இல் கிலாஃபத் தூதுக்குழுவோடு ஐரோப்பாவிற்குப் பயணம் செய்தார்.

1921 பிப்ரவரியில் கள்ளிக்கோட்டை சென்றார். மாப்பிள்ளைமார் பிரிட்டிஷாரை எதிர்த்து நடத்திய சுதந்திரக் கிளர்ச்சியில் பங்கேற்றார். 1921 ஆகஸ்டில் நடைபெற்ற தஞ்சாவூர் மாநாட்டில் இவர் ஆற்றிய உரை தேசத்துரோக

உரை என்று குற்றஞ்சாட்டப்பட்டது. (Who's who in Madras 1933, The Pearl Press Cochin, page 131) 1921இல் இரண்டு ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டு திருச்சி, கடலூர் சிறையில் அடைக்கப்பட்டு 1923ல் விடுதலையானார் யாகூப் ஹசன். பின்னாளில் 1937ல் இராஜாஜி அமைச்சரவையில் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தவர் யாகூப் ஹசன்.

மதுரகவி பாஸ்கரதாஸ்

முத்தமிழ் ஷேத்திர, மதுர பாஸ்கரதாஸ் அவர்கள் இயற்றிய 'இந்துதேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம்' முதற்பாகம் நூல் மதுரை வடக்கு ஆவணி மூலவீதியில் இ.ராமசாமிக் கோன் அவர்களால் அச்சிடப்பட்டு 1922இல் ஆறணா விலையில் வெளிவந்தது. அதில் பக்கம் 18இல் 'சென்னைக் கிலாஃபத்தின் நேசன் யாகூப்பு ஹசன்' என்ற நீண்ட கவிதை யாகூப் ஹசனின் புகழ் பாடுகிறது.

கிருஷ்ணசாமி சர்மா

மௌலான முஹமதலி, மௌலானா சௌக்கத் அலி கிலாஃபத் இயக்கத்தில் இந்தியா எங்கும் சுற்றுப்பயணம் செய்தவர்கள். முகம்மத் அலி, சௌக்கத் அலி அவர்களின் 'ஜீவிய சரிதையும், உபந்நியாசமும்' என்ற நூலை 1921களில் எழுதியவர் கிருஷ்ணஸ்வாமி சர்மா. இதன் இரண்டாம் பதிப்பு காங்கிரஸ் விளம்பரசபை சௌகார்பேட்டை சென்னையிலிருந்து ஒரு ரூபாய் விலையில் 179 பக்கங்களில் வந்துள்ளது.

ந. சிங்காரம் நாயக்கர்

'அலி சகோதரர்களாகிய சௌகத் அலி, முகம்மது அலி அவர்களின் ஜீவிய சரித்திரம்' கும்பகோணம் ஸ்ரீ நாகேஸ்வரசுவாமி தெற்குவீதி ந.சிங்காரம் நாயக்கரால் பிரசுரிக்கப்பட்டு கும்பகோணம் டி.கே. காசிநாதறாவ் – பிரதர்ஸ் அவர்களால் ஸ்டார் பிரஸில் பதிப்பிக்கப்பட்டு, 5000 பிரதிகள் அச்சிடப்பட்டு 1921இல் 2 அணா விலையில் வெளிவந்தது.

ஈரோடு விஜயம்

மக்கள் நாடெங்கும் தேசியக் கூட்டங்களில் கலந்து கொண்டனர். 'இந்து – முஸ்லிம் ஒற்றுமைக்கு ஜே', 'அல்லாஹூ அக்பர்' 'வந்தே மாதரம்' 'காந்திஜிக்கு ஜே', 'அலி சகோதரர்களுக்கு ஜே' என்ற முழக்கங்கள் எங்கும் எதிரொலித்தது.

1920இல் மஜ்லிஸுல் உலமா சபையின் மூன்றாவது மாநாடு ஈரோட்டில் நடைபெற்றது. அதில் மௌலானா முகம்மதலி, சௌக்கத் அலி, மௌலானா அபுல்கலாம் ஆஸாத், ஹக்கீம் அஜ்மல் கான், சௌத்ரி கலிகுஸ்ஸமான் வந்திருந்தார்கள். ஈரோட்டில் 'பகுத்தறிவுப் பகலவன்' தந்தை பெரியார் இல்லத்தில் தங்கியிருந்தார்கள். வீட்டின் முன்னே கூடும் கூட்டத்தினரைப் பார்த்து தனது நீரழிவு நோயையும் பொருட்படுத்தாமல் முகமதலி உரையாற்றினார். தம்பியின் உடல் நலத்தினை கருதி அண்ணன் சௌக்கத் அலியும் அந்த மக்களிடையே உரையாற்றினார். மக்களின் இதயத்தைப்பற்றி, உணர்ச்சி உண்டாக்குவனவாய் அந்த உரை இருந்தது என்று காயிதே மில்லத் இஸ்மாயில் சாஹிப் அது குறித்து கூறியுள்ளார்.

(மௌலானா ஜௌஹர் மலர், இஸ்லாமிய கலைக்கழகம், சென்னை, ஆர்.பி.எம். கனி தொகுத்தது, மௌலானாவைப்பற்றிய என் நினைவுகள், முஸ்லிம் லீக் மாகாணத் தலைவர் ஜனாப் முகம்மது இஸ்மாயில் சாஹிப் எம்.எல்.ஏ. பக்கம் 4)

புலவர் செ. இராசு

ஈரோட்டின் மையப் பகுதியான மணிக்கூண்டு அருகில் நேதாஜி சாலை ஆர்.கே.வி. சாலை பிரியும் இடத்தில் விசாலமான இடம் இருந்தது. மக்கள் பயன்பாட்டிற்குத் தண்ணீர் தொட்டியும் இருந்தது. அந்த இடத்திற்கு அலி சகோதரர்கள் நினைவாக 'சௌக்' என்று பெயர் வழங்கப்பட்டது. (புலவர் செ. இராசு தெரிந்த ஈரோடு தெரியாத செய்திகள், 2017, பக்கம் 60) (மதுரையில் பழைய திருவள்ளுவர் பேருந்துநிலையம் அருகிலும், கோவில்பட்டியிலும் அலி சகோதரர்கள் பெயரால் பூங்காக்கள் இருந்தன) தமிழகத்தில் அலி சகோதரர்களின் தாயார் பீஅம்மா சுற்றுப்பயணம் செய்து கிலாஃபத் இயக்கத்திற்கு வலு சேர்த்தார். இளையான்குடிக்கு அவர் வருகை தந்தபோது வண்டியில் அவரை அமரச் செய்து இளைஞர்களே அவர்களை அழைத்துச் சென்றனர்.

12.8.1920

பம்பாய் மெயிலில் காந்திஜியும் மௌலானா சௌக்கத் அலியும் அமர்ந்திருந்த இரயில் பெட்டி சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ஸ்டேஷன் மாஸ்டர் பார்லோவால் தனியாக கழட்டிவிடப்பட்டு முதல் பிளாட்பாரத்தில் நிறுத்தப்பட்டது.

எஸ்.கஸ்தூரி ரங்க ஐயங்கார்

கான்பகதூர் குத்தூஸ் பாட்சா, யாகூப் ஹசன், எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார், வித்தியாசாகர் பாண்டியா, துரைசாமி ஐயங்கார், அப்துல் ஹகீம், சக்கரவர்த்தி சி. இராஜகோபாலாச்சாரியார், திரு.வி. கல்யாண சுந்தர முதலியார். வ.வெ.சு. ஐயர், சல்லாகுருசாமி செட்டி, ஆதி நாராயண செட்டி, எஸ். சத்தியமூர்த்தி போன்றவர்கள் ரயில் நிலையத்திற்கு வந்திருந்தார்கள்.

எஸ். கஸ்தூரி ரங்க ஐயங்கார் சென்னை மாநிலக் காங்கிரஸ் தலைவர். கான்பகதூர் குத்தூஸ் பாட்சா சாகிப் சென்னை மத்திய கிலாஃபத் குழுத்தலைவர். பிறைச்சந்திரக் கொடிகள் நிறையப் பறந்தன. பிறைச் சந்திரனும் நட்சத்திரமும் இருக்கும் சின்னம் துருக்கிச் சின்னமாகும். இது கிலாஃபத் இயக்கத்தைக் குறித்தது.

ஹாஜி அப்துல் ரஹீம் சாகிப்

சென்னை புரசைவாக்கம் சாலை 63வது எண் வீட்டில் ஹாஜி அப்துல் ரஹீம் சாகிப் இல்லத்தில் காந்தியும் சௌக்கத் அலியும் தங்கியிருந்தார்கள். பம்பாய் மெயிலில் காந்தியும் சௌக்கத் அலியும் வரும் வேளையிலே அரக்கோணத்தில் கிருஷ்ணசாமி சர்மாவும் வேலூர் கிலாஃபத் குழுச் செயலாளர் ஹாபுதீனும் காந்தியடிகளை வரவேற்றனர்.

திருவல்லிக்கேணி கடற்கரையில்

12.8.1920 மாலையில் சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் மாபெரும் பொதுக்கூட்டம் கான்பகதூர் அப்துல் குத்தூஸ் பாட்சா தலைமையில் நடைபெற்றது. காந்தியடிகள் ஒரு மணிநேரம் பேசினார். இக்கூட்டம் திருவல்லிக்கேணி கடற்கரை மீன் காட்சி சாலைக்கு அருகில் நடைபெற்றது.

இதற்குமுன் சென்னையிலோ அல்லது தமிழகத்தின் வேறு எப்பகுதியிலோ இவ்வாறு பெரிய கூட்டம் கூடியதில்லை என்று அப்போதைய செய்தித்தாள்கள் எழுதின. (அ.இராமசாமி, தமிழ்நாட்டில் காந்தி, சென்னை, 1969, பக்கம் 273)

13.8.1920

கிலாஃபத் இயக்கம் பற்றியும் பஞ்சாப் ஜாலியன்வாலாபாக் படுகொலைபற்றியும் ஆலோசனை செய்ய இரகசியக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. காந்தியடிகள் கலந்துகொண்ட இந்தகூட்டத்தில் வி.எஸ்.சீனிவாச சாஸ்திரி, ஜி.ஏ.நடேசன், சி.பி.இராமசாமி ஐயர், ராவ் பகதூர், டி.ரெங்கசாமி, டி.எஸ். எஸ். ராஜன், ஜார்ஜ் ஜோசப், குத்தூஸ் பாட்சா சாகிப், யாகூப் ஹசன் போன்றவர்கள் பங்கேற்றனர்.

திருவல்லிக்கேணி ஜும்ஆ மசூதி

13.8.1920 மாலையில் திருவல்லிக்கேணி ஜும்ஆ மசூதியில் காந்தி உரையாற்றினார். பிரிட்டிஷாருடன் இந்திய முஸ்லிம்களுக்குள்ள உறவு அறுபட்டுப்போகும் என்று மௌலானா சௌகத் அலி (19.3.1920) விடுத்துள்ள அறிக்கையை நினைவுப்படுத்திய காந்தி, அரசாங்கத்தாரால் கொடுக்கப்படும் பட்டங்கள், கௌரவங்கள், அதிகாரச் சின்னங்கள், விருதுகள் ஆகியவைகளைப் பெறக்கூடாது பெற்றிருந்தால் அவைகளை திருப்பித்தர வேண்டும். பஞ்சாப் படுவதைப் பற்றியும், கிலாஃபத் விஷயம் பற்றியும் அரசாங்கத்தார் அக்கிரமம் செய்திருக்கிறார்கள் என்று உண்மையாக மனதில் படுமானால் ஜாதீய மரியாதைக்காகவும், நாட்டின் நன்மைக்காகவும் போலீஸ் சிப்பந்திகளும் அதிகாரிகளும் உடனே தங்கள் வேலைகளிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

இராணுவத்தில் உத்தியோகம் புரியும் சிப்பாய்களும் இந்தியப் படைவீரர்களும் இந்தியாவிற்கு ஏற்பட்டுள்ள சங்கடத்தை உத்தேசித்து அவர்கள் தாங்களாகவே தங்கள் பதவிகளிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும். அரசாங்க நிர்வாகத்திற்கு அடிப்படையாயிருக்கும் வரித்திட்டத்தை கொடுக்காமல் நிறுத்திவிடவேண்டும் என்று காந்தி தனது கருத்தை அங்கு வலியுறுத்தினார். வாதப்பிரதிவாதங்கள் எழத்தான் செய்தது. எனினும், “மனச்சாட்சி பூர்வமாக முஸ்லிம்கள் கிலாஃபத் சிக்கலில் அரசை எதிர்ப்பது என்று முடிவு செய்துவிட்டார்கள்”

என்று காந்தி திட்டமாகக் கூறினார். “ஆகையால் அமிர்தரசஸில் விரைவில் கூட இருக்கும் ஸ்பெஷல் காங்கிரஸ் முஸ்லிம்களின் முடிவிற்கு விரோதமாகத் தீர்மானம் நிறைவேற்றினால் நான் அதை ஏற்காமல் தன்னந்தனியாக நின்று போராடுமாறு முஸ்லிம்களைக் கேட்டுக் கொள்வேன்” என்று அறிவித்தார்.

(ஆர்.ஜி.மஜூம்தார், இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறு, பாகம் III, கல்கத்தா *1963* பக்கம் *67*)

14.8.1920 எச்.என்.செங்கலப்பா

14.8.1920 அன்று காந்தி ஆம்பூர் மற்றும் வேலூருக்கும் சென்றார். ஆம்பூரில் கௌரவ மாஜிஸ்திரேட்டுகள் பங்கி ஹயாத் பாஷா சாகிப், மாலிக் அப்துல் ரகுமான் சாகிப், முகம்மது காசிம், எச்.என். செங்கலப்பா ஆகியோர் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்தார்கள். யாகூப் ஹசன் தம் வக்கீல் தொழிலைத் துறந்தார். (ஹாபிஸ் ஏ.என்.முகம்மது யூசுப் பாஜில் பாகவி, நூருல் இஸ்லாம் ஆசிரியர் எழுதிய இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள், சென்னை, *1969* பக்கம் *220–221*)

பா. தாவூத்ஷா

கம்பராமாயணசாயபு என்று அழைக்கப்பட்ட கும்பகோணம் நாச்சியார் கோவில் பா.தாவூத்ஷா தமது சப் மாஜிஸ்டிரேட் பதவியை தூக்கி எறிந்தார்.

கம்பம் பீர்முகம்மது

மதுரை ஆண்டிப்பட்டியில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டராகப் பணியாற்றிய சிறந்த கால்பந்தாட்ட வீரர் கம்பம் பீர்முகம்மது பாவலர் தனது உத்தியோகத்தை கிலாஃபத்திற்காக உதறித் தள்ளினார். (உத்தமபாளையம் ப.காமாட்சி பிள்ளை *1926*ல் எழுதி மதுரை மு. கிருஷ்ணபிள்ளை வெளியிட்ட இந்து தேசாபிமானிகள் இனிய ரமணியகீதம் நூல் *59*வது பாடல் *54*வது பக்கம்)

தோழர் சிங்காரவேலு (18.2.1860 – 11.2.1948)

சென்னையில் கிலாஃபத் இயக்கத்தின்போது தீவிர தொண்டாற்றியவர்களில் முக்கியமானவர் தோழர் சிங்காரவேலு. ‘என்னுடைய வழக்கறிஞர் அங்கியைக் கழட்டி விட்டேன்’ என்று

24.5.1921இல் காந்திக்கு 'இந்து' வில் பகிரங்கக் கடிதம் தீட்டியவர். அத்தோடு நில்லாமல் தனது வழக்கறிஞர் அங்கியையும் எரித்தவர். வேல்ஸ் இளவரசரின் வருகையை எதிர்த்துப் பெரும் போராட்டம் நடத்தியவர்.

Singaravelu - member Provincial khilafat working committe â¡ø °PŠ¹ K.Murugesh and C.S.Subramanyam Singaravelu First Communist in South India, NewDelhi, January 1975 page 187 இல் உள்ளது. அந்த நூலின் தமிழாக்கம் 1991இல் வந்தபோது இந்தத் தகவல் பக்கம் 313இல் உள்ளது. கிலாஃபத்தின் போது அவர் தீவிரப்பணியாற்றியதையும், போலீசார் கண்காணிப்பில் இருந்ததையும் பேராசிரியர் முத்து குணசேகரன் தனது ஆய்வேட்டில் தெரிவித்துள்ளார். (Undersecratary safefileno. 492 dated July 9, 1924, Tamil nadu Archieves) 1922 பிப்ரவரியில் கும்பகோணத்திலும் 1922 ஆகஸ்டில் வட தஞ்சாவூர் அரசியல் மாநாட்டிலும் சிங்காரவேலு எழுச்சி உரை தந்தார்.

சக்கரைச் செட்டியார்

'கிலாஃபத்' எழுச்சியின்போது சென்னையில் சிறப்பாக பணியாற்றியவர் சக்கரைச் செட்டியார். இவரது வாழ்க்கை வரலாறு டிசம்பர் 1956இல் இரண்டணா விலையில் கே. ராமநாதன் எழுதி ஜனசக்தி வெளியீடாக 16 பக்கங்களில் முதலில் வெளிவந்துள்ளது. தற்போது வீ.ராஜமோகன் சக்கரை செட்டியார் என்ற 16 பக்க சிறு நூலை 2020இல் தந்துள்ளார்.

1920 ம் ஆண்டைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் நடைபெற்ற காங்கிரஸ் அரசியல் மாநாடுகளில் திரு.செட்டியார் முக்கியமாகப் பங்கு வகித்தார். (வே. ராமநாதன் நூல் பக்கம் 8)

திரு.வி.க. (26.8.1883 – 17.9.1953)

சென்னையில் கிலாஃபத் எழுச்சியில் அதிமுக்கியப் பங்குவகித்தவர் திரு.வி.க. 1918ல் சென்னையில் தொழிலாளர் சங்கம் கண்டார். 7.12.1917ல் தேசபக்தனில் ஆசிரியராக இருந்தார். காந்தி மற்றும் திலகரை 1919இல் சந்தித்தார். 'ஜனநாயக உணர்வுக்குச் சுயராஜ்யம் தேவை. ஆகவே ரௌலட் சட்டமும் பஞ்சாப் படுகொலையும், கிலாஃபத் கிளர்ச்சியும் சுயராஜ்ய வேட்கையை எழுப்பின' என்பார் திரு.வி.க. (இந்தியாவும் விடுதலையும் சென்னை, 1947 பக்கம் 309)

திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்

தமிழக வரலாற்றினை எழுதிட உதவும் குறிப்பிடத்தக்க நூல்களில் ஒன்று திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள். இது 1944இல் 1011 பக்கங்களில் வெளிவந்தது.

சுப்பராயகாமத், தண்டாணிபிள்ளையுடன் திரு.வி.க. சென்னையில் கிலாஃபத் கிளர்ச்சியின்போது தீவிரப் பங்காற்றினார். அமைதியான ஊர்வலம், பிரிட்டிஷ் அரசை எதிர்த்து அப்போது மகாகவி பாரதியும் பாடிக்கொண்டே ஊர்வலத்தில் வந்தது சரித்திர நிகழ்வுகள் ஆகும்.

19.1.1924, 20.1.1924 நாட்களில் இராமநாதபுரம் திருப்பத்தூரில் அரசியல் மகாநாடு ஸ்ரீநிவாச ஐயங்கார் தலைமையிலும்; கிலாஃபத் மாநாடு யாகூப் ஹசன் தலைமையிலும் தொண்டர் மாநாடு திரு.வி.க. தலைமையிலும் நடைபெற்றது. போலீசார் பயணத்தின்போது இன்னல் விளைவித்தனர்.

வைதிகக்கோலத்தில் கிழவி

கிலாஃபத் மகாநாடு நடைபெற்ற வேளையில் ஒரு வயதான பெண்மணி வைதிகக் கோலத்துடன் பழம், தேங்காய் முதலியன கொணர்ந்து கூட்டத்தினிடைப் புகுந்து வணக்கஞ் செய்தனர். 'இஃதென்ன' என்று யாகூப் ஹசன என்னைக் கேட்டனர். இவ்வம்மையார் நகரத்தார். நகரத்துப் பெண்மணிகள் சிவபக்தி சிவனடியார் பக்தியிற் சிறந்தவர். இஃது அடியவர் கூட்டமாக அவருக்குத் தோன்றியது. முறைப்படி வழிபாடு செய்கிறார் என்று உரைத்தேன். யாகூப் ஹஸன் இன்றும் இப்படிப்பட்டவர் இருக்கின்றாரே என்று வியந்தார். (முற்கூறிய திரு.வி.க. நூல் பக்கம் 344) இப்படிக் குறிப்பிட்டுள்ளார் திரு.வி.க.

டாக்டர் வரதராஜுலு நாயுடு (4.6.1887 – 23.7.1957)

'தமிழ்நாடு' இதழின் ஆசிரியர் டாக்டர் வரதராஜுலு நாயுடு. 1921 அக்டோபரில் தமிழ்நாடு இதழில் தேச விடுதலைக்காக எழுதிய கட்டுரைக்காக ஒன்பது மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தார். வரிசெலுத்த மறுத்ததால் அவர் கார், நிலம் ஆகியவற்றை பிரிட்டிஷ் அரசு பறிமுதல் செய்தது. 1923இல் மதுரை அரசியல் மாநாட்டில் பங்கேற்று மீண்டும் சிறைவாசம் ஆனார். (இதுகுறித்து விரிவான வரலாற்றை பழ. அதியமான் பெரியாரின் நண்பர் டாக்டர் வரதராஜுலு நாயுடு என்ற 479 பக்கங்களைக் கொண்ட நூலை 2012இல் எழுதியுள்ளார்)

எம்.பி.டி. ஆச்சார்யா

M.P.T.Acharya His life and Times என்னும் ஆங்கில நூலை C.S. சுப்பிரமணியம் 1995இல் 309 பக்கங்களில் தந்துள்ளார். அதில் பக்கம் 173இல் சென்னையில் 1919-1922 காலகட்டத்தில் நடைபெற்ற பக்கிங்காம் கர்னாடிக் நூற்பாலை தொழிலாளர்கள் வேலைநிறுத்தம், கிலாஃபத் மற்றும் காங்கிரஸ் இயக்கத்தின் ஒரு பகுதியாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

கிலாஃபத் இயக்கம்

1919-1920 ஆம் ஆண்டுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு மிக்க எழுச்சி மிக்கதொரு மக்கள் இயக்கத்தை வலுப்படுத்திட கிலாஃபத் இயக்கம் உதவி செய்தது. அதுமட்டுமல்ல சாதாரண முஸ்லிம் மக்களை தேசிய அரசியல் என்ற பிரதான நீரோட்டத்துக்குள் அது கொண்டு வந்து சேர்த்தது. இன்னும் சொல்லப்போனால் இந்தியக் கம்யூனிச இயக்க முன்னோடிகளில் சிலர் கூட கிலாஃபத் இயக்க ஆதரவாளர்களாகவோ அல்லது முஹாஜிர்களாகத்தான் தங்கள் அரசியல் வாழ்க்கையை தொடங்கினார்கள். கிலாஃபத்தின் கிளை இயக்கமாக ஹிஜ்ரத் இயக்கம் தோன்றியது.

18000 முஹாஜிர்கள்

கிலாஃபத் இயக்கம் இந்திய முஸ்லிம் இளைஞர்களுக்கு ஒரு அறைகூவலை விடுத்தது. 1920ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களைத் தீவிரப்படுத்துவதற்காக 18000 முஹாஜிர்கள் இந்தியாவை விட்டு வெளியேறினர். (இந்திய கம்யூனிஸ்ட் இயக்க வரலாறு ஆரம்பகால ஆண்டுகள் 1920 - 1933 தொகுதி 1 ஹர்கிஷன்சிங் சுர்ஜித், ஜோதிபாசு, இ.கே.நாயனார், பி.ராமச்சந்திரன், கொரதாலா சத்யநாராயணா, அனில் பிஸ்வாஸ் தமிழில் கி. இலக்குவன் சென்னை 2006, பக்கம் 58-59 (History of the Communist Movement in India Volume I, 2005 NewDelhi, page 28)

முஹாஜிர்கள் நாடு துறந்து வேறுநாடு சென்றவர்களில் தமிழகத்தினர் சிலரும் இருந்திருக்கக்கூடும். இவர்கள் தடுக்கப்பட்டார்கள். பெருத்த உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டது. இவர்கள் பயங்கர உபத்திரவங்களுக்கு உள்ளானார்கள் எனலாம். (முஹம்மது ஸெயின், முஸ்லிம், இந்தியா, கொழும்பு 1977 பக்கம் 175)

வ.உ.சிதம்பரம் பிள்ளை – சுப்பிரமணிய சிவா

கிலாஃபத் இயக்க காலகட்டத்தில் தேசபக்தச் செம்மல் ‘கப்பலோட்டிய தமிழன்’ வ.உ.சி.யின் பங்கு போற்றற்குரியது. சுதந்திரச் சங்கநாதம் சுப்பிரமணிய சிவாவின் பணியும் மெச்சத்தக்கது. 12.2.1919இல் சென்னையில் ரௌலட் மசோதா எதிர்ப்புக் கூட்டம் சுப்பிரமணிய சிவா ஏற்பாட்டில் நடைபெற்றது. 4000 மக்கள் கூடியிருந்தனர். வ.உ.சி. வீரஉரையாற்றினார். 16.3.1919இல் ரங்கநாத நாயுடு தலைமையில் சுப்பிரமணிய சிவா ஏற்பாடு செய்த கூட்டம் நடைபெற்றது. எம்.என். சுப்பிரமணிய ஐயர், அனுமந்தராவ், தண்டபாணி பிள்ளை, பாஷ்யம் அய்யங்கார், ஆதிநாராயண செட்டியார், வ.உ.சி. ஆகியோர் வீரஉரை நிகழ்த்தினர். (Secret Reports Retained File Vol. I. 1920, மேற்கோள் பெ.சு.மணி ‘வீரமுரசு சுப்பிரமணிய சிவா’ சென்னை, 1984, பக்கம் 158.)

17.3.1919 கஸ்தூரிரங்க அய்யங்கார் தலைமையில் வ.உ.சி. சென்னையில் முழக்கம். மதுரை ஜார்ஜ் ஜோசப் ஆங்கிலத்திலும், ஹர்சர்வோத்தமராவ் தெலுங்கிலும் பேசினர். காந்தியடிகளுடன் வ.உ.சி. ஒரே மேடையில் பேசியது இப்போதுதான். 28.4.1920 தூத்துக்குடியில் வ.உ.சி. பேசினார்.

19.3.1920 கிலாஃபத் நாள்

காந்தியடிகள் அறிவித்த கிலாஃபத் இயக்கத்தின் சார்பில் சென்னை மாநிலக் கல்லூரிக்கு எதிரில் கிலாஃபத் நாள் 19.3.1920இல் கொண்டாடப்பட்டது. திரு.வி.க. தலைமை தாங்கினார். மௌலவி முகம்மது சாகிப், கான்பகதூர் அப்துல் குத்தூஸ் பாதுஷா சாகிப், ஸி. அப்துல் ஹக்கிம் சாகிபு, ஹர்சர்வோத்தமராவ், ஏ. அரங்சாமி ஐயங்கார், வி. சக்கரைச் செட்டியார், முனகலா ஜமீன்தார், டாக்டர் யூ.ராமாராவ், டாக்டர் சுப்பராயன், டாக்டர் நஞ்சுண்டராவ், சகோதரி பாலாம்பாள், கஸ்தூரி ரங்க ஐயங்கார், ஸ்ரீஆதி நாராயண செட்டியார், டி.வி.வெங்கடராம ஐயர், ஜி. ரங்கய்யநாயுடு ஆகியோர் பேசினர். (என்.சம்பத், பெ.சு.மணி, வ.உ.சிதம்பரம் பிள்ளை, புதுதில்லி, ஆகஸ்ட் 1995 பக்கம் 211–212)

1920 ஆம் ஆண்டில் தொடக்க மாதங்களில் வெவ்வேறு கிலாஃபத் மாநாடுகளிலும் கோபாவேசமான சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டன. பிரிட்டிசாருக்கு எதிராக ஜிஹாத் (புனிதப்போர்)

தொடுக்கப்போவதாக பேச்சுகள் அடிபட்டன. 1920ஆம் ஆண்டின் காலகட்டத்தில் கிலாஃபத் இயக்கம் நாட்டின் அமைதிக்குத் தொடர்ந்து அதிகரித்து வரும் ஆபத்தாகி இருந்தது என்று சில வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டனர். (P.C. Bamford, Histories of the Non-Co.-Operation and Khilafat Movement Page 149.)

போல்ஷ்விசம்

கிலாஃபத் கூட்டங்களில் ரஷ்ய போல்ஷ்விசத்தை வரவேற்றுப் பேசினார்கள் என்று அதே நூலில் 153வது பக்கத்தில் பாம்போர்டு குறிப்பிடுகிறார். வ.உ.சி.யும் சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் போல்ஷ்விசம் பற்றி பேசினார். முஸ்லிம் தலைவர்களும் போல்ஷ்விசத்தை வரவேற்றுப் பேசினார்கள். (சுனிதிகுமார் கோஷ், தமிழில் சிங்கராயர், இந்தியாவும் பிரிட்டிஷ் ஆட்சியும் 1919–1947, கோவை 2008, பக்கம் 253.)

1920 கோவையில் வ.உ.சி.யின் வீட்டுக்கு காந்தி வந்திருந்தார். அன்று மாலையில் என்.எஸ். இராசாமி அய்யங்கார் தலைமையில் காந்தி பேசினார். வ.உ.சி. காந்தியின் ஆங்கிலப்பேச்சை தமிழில் மொழி பெயர்த்தார்.

உடுமலைப்பேட்டை திருமதி. மீனாட்சி அம்மையார் ஆவேசமாகப் பிரசங்கம் செய்தார். அன்று பல தேசபக்தர்கள் ஆங்கில ஆட்சிக்கு எதிராகப் பிரசங்கம் செய்தார்கள். 1920 கிலாஃபத் காலம். இந்தத் தகவலைத் தருபவர் வ.உ.சி. ஆறுமுகம் (வ.உ.சி.யின் மூத்த புதல்வர்) (கோவையில் என் தந்தை கட்டுரை, விடுதலை வீரர் வ.உ.சி. நூற்றாண்டு விழா மலர் 1872 – 1972. கோவை சன்மார்க்க சங்க கட்டிடத்தில் 1972 டிசம்பர் 24இல் தவத்திரு குன்றக்குடி அடிகளால் வெளியிடப்பெற்ற நூல். புக்ஸ் வேர்ல்டு கோவை, 1992, பக்கம் 99.)

மலபார் மாப்பிளைமார் புரட்சி

மலபாரில் மாப்பிள்ளைமார் செய்த புரட்சியை ஆதரித்து 1921 மார்ச்சில் கோயமுத்தூரில் வ.உ.சி. பேசினார். கிலாஃபத் இயக்கத்தின் ஒரு பகுதி அது என்றார் வ.உ.சி. அவர் மீது வழக்குத் தொடரப்பட்டு, கைது செய்யப்பட்டு, சொந்தப்பொறுப்பில் விடுதலையானார்.

1920ல் நாகபுரியில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் பங்கேற்ற சுப்பிரமணிய சிவா கிலாஃபத் ஒத்துழையாமை

இயக்கத்திற்கும் மலபார் மாப்பிள்ளைமார் கிளர்ச்சிக்கும் கொண்டுவரப்பட்ட ஆதரவுத் தீர்மானத்தை ஆதரித்தார். (ரகமி, சுப்பிரமண்ய சிவம், சென்னை, இரண்டாம் பதிப்பு 1989, பக்கம் 86) 14.8.1920இல் ஆம்பூரில் நடைபெற்ற கிலாஃபத் கூட்டத்தில் காந்தி கலந்து கொண்டார். (ஹஸ்ரத் மக்காவில் உள்ள இரயில்வே கிராசிங்கில்) 4,000 பேர் கூடியிருந்தனர். வேலூரில் மாலையில் நடைபெற்ற கூட்டத்தில் 20000 பேர் பங்கேற்றனர். காந்தியின் உரையை யாகூப் ஹசன் இந்துஸ்தானியிலும் ராஜாஜி தமிழிலும் மொழி பெயர்த்தனர்.

அக்கூட்டத்தை முன்னின்று கவனித்து ஏற்பாடு செய்தவர் சுப்ரமண்யசிவா என்று ரகமி அதே நூல் பக்கம் 87இல் தெரிவித்துள்ளார். கிலாஃபத் எழுச்சி காலகட்டத்தில் சாத்தூர் அரசியல் மாநாடு, விழுப்புரம் அரசியல் மாநாடு, முன்னர் கூறிய ஆம்பூர் கிலாஃபத் மாநாடு இவைகளில் சுப்ரமணிய சிவா நிகழ்த்திய பிரசங்கங்கள் குறிப்பிடத்தக்கவை என்பார் ரா.ஸ்ரீநிவாஸவரதன். (சுப்பிரமணிய சிவா வாழ்க்கை வரலாறு மதுரை, 1962, பக்கம் 57) செ. திவான், சுதந்திரச் சங்கநாதம் சுப்பிரமணிய சிவா சிறைவாசம், பாளையங்கோட்டை 2012, பக்கம் 51)

காரைக்குடியில் தேசிய எழுச்சிக்கு வித்திட்டவர் சுப்பிரமணிய சிவா என்று இந்துமதாபிமான சங்கப் பொன்விழா மலரில் சா.கணேசன் குறிப்பிட்டுள்ளார். (சோமலெ, இராமநாதபுரம் மாவட்டம், சென்னை 1972 பக்கம் 178)

தமிழகத்தில் இராஜாஜியும் – யாகூப் ஹசனும் இணைந்து கிலாஃபத் கமிட்டியை உருவாக்கித் திறம்பட செயல்பட்டனர். 1920 மே மாதத்தில் மாகாண கிலாஃபத் கமிட்டி சென்னையில் அமைக்கப்பட்டது. திருச்சியில் ராஜாஜி, டி.எஸ்.எஸ்.ராஜன், டி.வி.சாமிநாத சாஸ்திரி, காஜாமியான் ராவுத்தர், செய்யது முர்த்தஸா சாகிப் எழுச்சியுடன் கிலாஃபத்தில் பணியாற்றினர். (Saroja Sundararajan, March to Freedom in Madras Presidency 1916-1947, Madras, 1989, Page 226)

15.8.1920

சென்னை மாநில காங்கிரஸ் கஸ்தூரிரங்க ஐயங்கார் தலைமையில் கூடி ஆலோசனைகள் செய்தது.

16.8.1920

போட்மெயில் ரயிலில் மௌலானா சௌகத் அலியுடன் சென்னையிலிருந்து புறப்பட்ட காந்தி கும்பகோணம் சென்றார். வழியில் செங்கற்பட்டு, விழுப்புரம், கடலூர், சிதம்பரம், மாயவரம் இரயில் நிலையங்களில் மக்கள் உற்சாக வரவேற்பளித்தனர். கும்பகோணத்திற்கு காந்தி சென்றபோது இராஜகிரி, நாச்சியார் கோவில், தஞ்சாவூர் ஆகிய இடங்களிலிருந்து ஆயிரக்கணக்கில் மக்கள் கூடியிருந்தனர். ராஜகிரி முஸ்லிம்கள் சார்பில் அப்துல் மஜித் கிலாஃபத் இயக்கத்திற்காக பணமுடிப்பை காந்தியிடம் தந்தார். நாகூர் முஸ்லிம் லீக்கும், நாகப்பட்டினம் முஸ்லிம் லீக்கும் தனித்தனியாக கிலாஃபத் நிதியாக நாகப்பட்டினத்திற்கு காந்தி வந்தபோது தந்தார்கள். நாகூரில் மாலிம் சாகிப் வழக்கறிஞர் தலைமையில் கூட்டம்; ஏராளமான பெண்கள் பங்கேற்றனர்.

கிலாஃபத் சிக்கலில் முஸ்லிம்கள் உள்ளம் எந்த அளவு புண்பட்டிருக்கிறது என்பதையும் இந்த இயக்கம் எந்த அளவு அவர்களுடைய உள்ளத்தை தொட்டிருக்கிறது என்பதையும் இது காட்டுகிறது என்று காந்தி தம் உரையில் கூறினார்.

நீடாமங்கலத்தில் தஞ்சாவூர் கிருஷ்ண விலாஸ் தியேட்டரில் வி.பி.மாதவராவ் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. காந்தியின் உரையை இ.சூரிய நாராயண ஐயர் மொழிபெயர்த்தார்.

திருச்சியில் மாபெரும் கூட்டம் சௌக் மைதானத்தில் நடைபெற்றது. மக்கள் வெள்ளம் திரண்டது, முகமது பஸுதீன் சாகிபு தொண்டர் படைத்தலைவராக இருந்தார். 20000க்கு மேல் மக்கள் கூடினர். திருச்சி கிலாஃபத்குழுச் செயலாளர் வி.என். முகம்மது இப்ராகிம் தமிழில் பேசினார். டாக்டர் அப்துல் சுபான் சாகிப் இந்துஸ்தானியிலும் டாக்டர் சாஸ்திரி ஆங்கிலத்திலும் வரவேற்புரைகள் வாசித்தனர். திருப்பராய்த்துறை காந்தி சங்கப் பிரதிநிதியும் வரவேற்புரை தந்தார். சையது முர்த்தஸா சாகிப் பேசினார். டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் நன்றி உரையாற்றினார். திருச்சியிலிருந்து சையத் முர்த்தஸா சாகிப், வழக்கறிஞர் ஜார்ஜ் ஜோசப்புடன் கள்ளிக்கோட்டைக்குப் பயணமாக 18.8.1920 அதிகாலை 3.30 மணிக்கு ஈரோடு வந்தார் காந்தி. 10000க்கும் மேலான மக்கள் கூடி, அல்லாஹு அக்பர், வந்தே மாதரம் என்று முழங்கினர்.

19.8.1920 கள்ளிக்கோட்டை சென்றுவிட்டு 20.8.1920

மங்களூர் வழியாக சேலத்திற்கு வந்து கொண்டிருந்த காந்திக்கு, திருப்பூர் இரயில் நிலையத்தில் கிலாஃபத் நிதிக்காக பணமுடிப்பை பொதுமக்கள் சார்பாக டி.எஸ். துரைசாமி ஐயர் வழங்கினார். எம்.வி. கருப்பண்ணச் செட்டியார் கையால் நூற்ற நூல் சிட்டங்களைக் கொடுத்தார்.

காந்தியிடம் நெருங்க முடியாத அளவிற்கு கூட்டம். சேலத்தில் டாக்டர் வரதராஜுலு நாயுடு இல்லத்தில் தலைவர்கள் தங்கினர். சேவாப்பேட்டையில் 4000 ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. அங்கமுத்துச் செட்டியார் தலைமையில் காந்திக்கு பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.

சேலத்தில் 21.8.1920இல் டி.பி. சின்ன கிருஷ்ண ரெட்டியார் தர்மத்தில் நிறுவியிருந்த தண்ணீர்த் தொட்டியை காந்தியும் மௌலானா சௌகத் அலியும் திறந்து வைத்தனர்.

சேலம் கிலாஃபத் மாநாட்டில் தலைவர்கள் அரிய உரைஆற்றினார்கள். மாலையில் பெங்களூரில் கூட்டம் நடைபெற்றது. அங்கு கூட்டம் 22.8.1920 சென்னைக்கு வந்த காந்தி கிலாஃபத் குழு உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசினார். கிலாஃபத் இயக்கத்தை ஆதரித்து கிறிஸ்தவப் பெண்மணி காந்திக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். இந்து – முஸ்லிம் – கிறிஸ்தவ ஒற்றுமை பற்றி காந்தி உரையாற்றினார்.

1921இல் கூடிய அகில இந்தியக் கிறிஸ்தவப் பெருமன்றம் இந்திய நாடு அந்நியர் ஆட்சியிலிருந்து விடுபட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. (Report of the VIII All Indian Conference of Indian Christians, Lohore, December 1921, PP. 40--&41.) கரூர் மதலைமுத்து, தேவசகாயம், நீலகிரி மகாதேவபுரம் பால், திருநெல்வேலி ஆரோக்கியம் பெர்ண்டோ, துலுக்கர்பட்டி சாமுவேல், தஞ்சாவூர் W.C. பீட்டர் போன்றவர்கள் வெள்ளையராட்சியை கிலாஃபத் இயக்க காலத்தில் எதிர்த்து சிறை சென்றார்கள். (முனைவர் எம்.ஏ. சேவியர், இந்திய விடுதலைப் பேராட்டமும் கிறிஸ்தவர்களும், திண்டுக்கல், 2016, பக்கம். 85–86) தூத்துக்குடி தேசபக்தர் அ.மாசிலா மணிப்பிள்ளை (1885–1949) கிலாஃபத் இயக்கத்தில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்.

தண்பொருநை மணற்பரப்பின் மீதும், திருவல்லிக்கேணி கடற்கரை மீதும் கிலாஃபத் மக்கள் அலைகளை மோதவிட்டது. திடல்களும் வெளிகளும் 'திலகர் சதுக்கங்கள்' 'காந்தி

மைதானங்கள்', சி.ஆர்.தாஸ் கூட்டங்கள், வ.உ.சி. மேடைகள் ஆயின என்பார் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை. (இந்திய மக்கள் விடுதலை இயக்க வரலாறு சென்னை 1953 பக்கம் 258)

'கிலாஃபத், ஒத்துழையாமையின் வேகத்தையும் விறுவிறுப்பையும் கண்ணால் கண்டபின்பே எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஏதும் புரியவில்லை. திகைப்பே கொண்டுள்ளேன்' என்று அரசப்பிரதிநிதி வாய்விட்டு வருந்தியுரைக்க நேர்ந்தது. (எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர், சுதந்திர சரித்திரம், சென்னை 1953, பக்கம் 280)

காந்தியின் தமிழக சுற்றுப்பயணம் கிலாஃபத் இயக்கம் பற்றிய செய்திகளை அ.இராமசாமியின் தமிழ்நாட்டில் காந்தி நூலில் விரிவாகக் காணலாம்.

15.9.1921ல் காந்தி திரும்பவும் சென்னை வந்தார். கஸ்தூரி ரங்க ஐயங்கார் ஏ.ரெங்கசாமி ஐயங்கார், சத்தியமூர்த்தி, ராஜாஜி, டி.பிரகாசம் போன்றவர்கள் காந்தியை வரவேற்றனர்.

காந்தியடிகளுடன் மௌலானா முகமதலியின் துணைவியார் பேகம் முஹம்மது அலி, கான்பூர் மௌலானா சுபானி, கொண்டாவேங்கட சுப்பையா வந்திருந்தனர். டி.வி.வேங்கடராம ஐயர் மாலையிட்டு காந்தியை வரவேற்றார். சாந்தோமில் சல்லிவான் தெருவில் உள்ள இராம்ஜி கல்யாண்ஜி இல்லத்தில் காந்தி தங்கினார். மாலையில் யாகூப் ஹசன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. காந்தி ஒரு மணிநேரம் உரை நிகழ்த்தினார். முஸ்லிம்களின் தொழுகை நேரம் வரவே, இடையில் காந்தி பேச்சு பத்து நிமிடங்கள் நிறுத்தப்பட்டது. முந்தைய பேச்சை ஏ.ரெங்கசாமி ஐயங்கார் மொழிபெயர்க்க முஸ்லிம்களின் தொழுகைக்குப் பிந்தைய பேச்சை சத்திய மூர்த்தியும் மொழி பெயர்த்தார். 14.9.1921இல் மௌலானா முகமதலியை பிரிட்டிஷ் அரசு ஏற்கனவே கைது செய்திருந்தது. காந்தி மலபார் செல்ல தடையும் தரப்பட்டது.

17.9.1921

விழுப்புரம், பரங்கிப்பேட்டை வழியாக கடலூர் சென்ற காந்தி திரும்பவும் பரங்கிப்பேட்டை வந்தார். காந்தியடிகளுடன் சுற்றுப்பயணத்தில் அன்வாருதீன், பிரபுதாசு ஆகியோர் வந்திருந்தனர். விழுப்புரம் இரயில் நிலையத்தில் வி.டி. இராமசாமி ஐயர் காந்தியை வரவேற்றார். பண்ருட்டி வழியாக

பரங்கிப்பேட்டை சென்றார். அங்கிருந்து கடலூர். கடலூரில் காந்தியின் பேச்சை எம்.கே. ஆச்சார்யா தமிழில் தந்தார். எஸ்.சீனிவாச ஐயங்கார் தலைமை தாங்கினார். திருமதி அசலாம்பிகையம்மையார், திருப்பாப்புலியூர் கிருஷ்ணசாமி செட்டி ஆகியோர் பேசினார்கள். சாரங்கசெட்டி காந்தியிடம் நிதி தந்தார்.

சிதம்பரம், கொள்ளிடம், சீர்காழி, மாயவரம் இடங்களில் மக்கள் வெள்ளத்தில் காந்தி உரையாற்றினார். குடந்தையில் என். கிருஷ்ணசாமி ஐயங்கார் வரவேற்றார். வடபாதி மங்கல வரவேற்புரையை பா.தாவூத்ஷா, கந்தசாமி பிள்ளை ஆகியோர் தந்தனர். பணமுடிப்பும் வழங்கப்பட்டது. கிருஷ்ணதாசும் பங்கேற்றார். காந்தியின் பேச்சை பந்துலு வெங்கட்ராம ஐயர் மொழி பெயர்த்தார்.

*6.10.1921*இல் ஆமதாபாத்தில் காங்கிரஸ் செயற்குழு கூட இருந்தது. மௌலான சௌக்கத் அலியும் கைது செய்யப்பட்டார். காந்தியும் கைது செய்யப்படலாம் என்ற நிலை ஏற்பட்டது. *4.10.1921* இல் பம்பாயில் கூடிப்பேசுவோம் என காந்தி அறிக்கை தந்தார்.

18.9.1921

திருச்சிக்கு வந்தார் காந்தி. டி.எஸ்.எஸ்.ராஜன் இல்லத்திலும் சுபானி காஜாமியான் ராவுத்தர் இல்லத்திலும் தங்கினார். வ.வே.சு. ஐயர் கட்டுரை எழுதியதற்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. வ.உ.சி.க்கு சொந்த ஜாமீன் கேட்கப்பட்டது. இவைகளுக்கிடையில் *18.9.1921*ல் காந்திக்கு திருச்சி நகரசபை உறுப்பினர் கே.வி.ஜம்புனாத ஐயர் வரவேற்பு தந்தார். மௌலவி சையத் முர்த்தஜா சாகிப் ஆங்கிலத்திலும், டி.வி. நரசபிள்ளை தமிழிலும் காந்தியை வரவேற்றனர். தமிழகத்திலே *15000* ரூபாய் நிதி வசூலானது திருச்சியில்தான் என்று டி.எஸ்.எஸ். ராஜன் கூறினார்.

கல்கத்தா காங்கிரஸ், நாகபுரி காங்கிரஸ், கிலாஃபத் கிளர்ச்சி, சுயராஜ்யத் தீர்மானம், ஒத்துழையாமை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டிருந்தன. தமிழ் நாட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் சுற்றித்திரிவதுமாக இருந்தேன் என்று டி.எஸ்.எஸ்.ராஜன் குறிப்பிடுவார். அவரது நினைவு அலையில் மேலும் பல செய்திகளை அறியலாம். (டாக்டர்

தி.சே. சௌ. ராஜன், நினைவு அலைகள், முதற்பதிப்பு 1947. இரண்டாம் பதிப்பு 2011, சென்னை பக்கம் 196 (நூல் 351 பக்கங்கள்)

மௌலவி சையத் முர்த்துஸா சாகிப்

திருச்சியில் டி.எஸ்.எஸ். ராஜனுடன் டி.வி. சாமிநாத சாஸ்திரி, கொடியாலம் கே.வி.ரங்கசாமி அய்யங்கார், மௌலவி சையத் முர்த்துஸா சாகிப் ஆகியோர் கலந்து கொண்டனர். முர்த்துஸா சாகிப் ஓர் ஆசிரியர், சுதந்திரப் போரில் தீவிரப் பங்காற்றியவர். சட்டமன்ற உறுப்பினரான இவரது வரலாற்றை அறிய S.M. Fossil, The Islamic South Madras 1941 Page 191 - 193 இல் பார்க்கலாம்.

கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி, மணக்கால் சதாசிவம், முகமது உஸ்மான், மன்னார்குடி பாஸ்யம், புதுக்கோட்டை எஸ். வெங்கட்ராமன், வக்கீல் டி.வி. பாலகிருஷ்ண சாஸ்திரி, ஆர். நாராயணசாமி அய்யங்கார், என். ஹாலாஸ்யம், உரையூர் ப. சங்கிலியா பிள்ளை, அ.வடிவேல் ஆசாரி, சுத்தானந்த பாரதியார், கரூரில் உரையாற்றிய நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை, எஸ்.ராமநாதன், சோடாக்கரை முகம்மது உசேன், அப்துல் வகாப், அப்துல் அஜீஸ், சி.டி.கோபாலர் போன்றவர்கள் ஒத்துழையாமை, கிலாஃபத் காலத்தில் அரும்பணியாற்றியவர்கள். (சு.முருகானந்தம், தி.மா.சரவணன், பைம்பொழில் மீரான், கவிஞர் நந்தலாலா நடந்தாய் வாழி திருச்சிராப்பள்ளி, திருச்சி 2002, பக்கம் 82–85)

20.9.1921இல் ஸ்ரீரங்கத்தில் பி.சீனிவாச ராக ஐயங்கார் காந்தியை வரவேற்றார். பொதுக்கூட்டத்தில் டி.வி. சேஷாத்திரி ஐயர் பேசினார். கரூர் திண்டுக்கல், புதுக்கோட்டை, மணப்பாறை அம்மயநாயக்கனூர், வாடிப்பட்டி, கருப்பட்டி, சோழவந்தான், சமயநல்லூர் இவைகளில் மக்கள் வெள்ளம் கூடியது. ஒத்துழையாமை – கிலாஃபத் இயக்க முழக்கங்கள் அதிர்ந்தன.

மதுரையில்

ராம்ஜி கல்யாண்ஜி வீட்டில் மதுரை மேலமாசிவீதியில் காந்தி தங்கி இருந்தார். 22.9.1921 தனது ஆடை மாற்ற முடிவை எடுத்தார். பின்னர் 23.9.1921 நெல்லை வந்தார். கங்கைகொண்டானில் திருகூட சுந்தரம்பிள்ளை வரவேற்றார்.

மாலையில் தாமிரபரணி ஆற்றங்கரையில் எஸ்.கே.ஷேக்மொய்தின் சாகிப் தலைமையில் 20000 பேர்கள் பங்கேற்ற கூட்டம் நடைபெற்றது. காந்தி நீண்ட உரை தந்தார். கிலாஃபத் எழுச்சி கொழுந்துவிட்டெரிந்தது. 24.9.1921 நெல்லையிலிருந்து திருச்சி சென்றார் காந்தி. பின்னர் ஈரோடு திருப்பூர் வழியாக கோவைக்கு 25.9.1921 இல் சென்றார்.

திருப்பூர் இரயில் நிலையத்தில் கருப்பண்ணச்செட்டியார் சிறப்பாக வரவேற்பு தந்தார். கோவை சிங்காநல்லூரில் நகராட்சி துணைத்தலைவர் கே.சுப்பிரமணிய முதலியார், சுல்தான் சாகிப், என்.எஸ். இராமசாமி ஐயங்கார் காந்தியை வரவேற்றனர்.

சேலம் சி. விஜயராகவச்சாரியார்

கோவை காரனேஷன் பூங்காவில் பெரிய கூட்டம் நடைபெற்றது. தேவகோட்டையில் காந்திக்குத் தந்த பொருட்கள் ஏலம் விடப்பட்டது. பீளமேடு பொன்னி நாயக்கர் ரூ.1500க்கு அதனை ஏலம் எடுத்தார். 26.9.1921 காந்திக்கு மௌனதினம். 27.9.1921 சேலம் சென்றார். வெங்கடப்பச் செட்டியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, ஆதிநாராயணன செட்டியார், சேலம் சி.விஜயராகவச்சாரியார், (18.6.1852 – 19.4.1944) சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் வரவேற்றனர். மாலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தச் சுற்றுப்பயணத்தில் கிலாஃபத் நிதியாக ரூ.153ம் 12 அணாவும், 9 பைசாவும் அளிக்கப்பட்டது. இவ்வாறு காந்தியடிகள் கிலாஃபத் காலத்தில் இருமுறை தமிழகத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தினார்.

மதுரையில்

1919 அக்டோபர் 17இல் கிலாஃபத் நாள் நாடெங்கும் கொண்டாடப்பட்டது. மதுரை தாசில்தார் பள்ளிவாசலிருந்து ஊர்வலம் புறப்பட்டு, மதுரை காலேஜ் மைதானத்தில் கிலாஃபத் ஊர்வலம் நிறைவுற்றது. 174.1920இல் மதுரையில் பிஷப் கார்டனில் கிலாஃபத் மாநாடு குறித்த கூட்டம் நடைபெற்றது. சையத் அகமது இராவுத்தர், சையத் சம்சுதீன் சாகிப் கலந்து கொண்டனர்.

மதுரை மௌலானா சாஹிப்

மதுரையில் 18.6.1920இல் மௌலானா சாஹிப் (இவர் பெரிய தீரர். இவர் குறித்து தனி நூலே எழுதலாம்) முகமது சாலியா (பின்னாளில் 1927இல் நீலன்சிலை உடைத்த தீரன் இவர்) மந்தேஸ்வர சர்மா ஆகியோர் கலந்து கொண்ட கிலாஃபத் கூட்டம் நடைபெற்றது.

1.8.1920 இல் மதுரையில் மறியல்போர் நடைபெற்றது. ஜே. ராமய்யர் தலைமையில் மௌலானா சாகிப் முன்னிலையில் நடைபெற்றது. (செ.திவான் விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள், 1994, பாளையங்கோட்டை பக்கம் 115-116)

பி.கே. ராமாச்சாரி, பி.வி.சுப்பையா, ராஜாராம்கொண்டா, எல்.ஆர். முத்துக்கிருஷ்ணன் பள்ளிப்படிப்பைத் துறந்தனர். ராமன் செட்டியார், எஸ்.டி.கிருஷ்ண அய்யங்கார், என். நாராயண அய்யர், பி.சுந்தரம்பிள்ளை, ஆதிசேச நாயுடு, பத்மசினியம்மாள், லெட்சுமியம்மாள், இமாமுதீன்சாகிப், ஆஜம் சாகிப், ஜார்ஜ்ஜோசப் (இவர் தலைசிறந்த வழக்கறிஞர் இவர் குறித்து பழ. அதியமானின் அறியப்படாத ஆளுமை ஜார்ஜ் ஜோசப் 112 பக்கங்களைக் கொண்ட நூல் வெளிவந்துள்ளது.) டாக்டர் இ.எஸ். ராமசுப்பு, சேச அய்யங்கார் தீவிரமாகப் பணியாற்றியவர்கள் ஆவர்.

(விடுதலைப்போரில் மதுரையின் பங்கு என்ற எஸ்.கணேசனின் 792 பக்க நூல், எம்.ஏ. சர்தாரின் இந்திய விடுதலைப் போராட்டத்தில் மதுரையின் பங்களிப்பு 150 பக்க நூல், ப. திருமலையின் மதுரை அரசியல் 336 பக்கங்கள், மதுரை காந்தி நா.ம.ரா.சுப்பராயன் வாழ்கை வரலாற்று நூல்கள், ந. பாண்டுரங்களின் விடுதலை வேள்வியில் மதுரை 101 பக்கங்கள் நூல் ஆகியவற்றை வாசிக்கலாம்)

இராமநாதபுரம்

இராமநாதபுரத்தில் துவக்கத்தில் ஒத்துழையாமை இயக்கத்திற்கு ஆதரவு அதிகம் இல்லை. (இந்திய விவரச்சுவடி, இராமநாதபுரம் மாவட்டம், அ.ராமசாமி, சென்னை 1990, பக்கம் 140) தேசியவாதிகள் காந்தியை அழைத்தார்கள். 1921இல் மகாத்மா காந்தியும் சௌகத் அலியும் தமிழகம் வந்தபோது இராமநாதபுர மாவட்டத்தில் மகாத்மா காந்திக்கு பெருங்கூட்டங்கள் கூடின. தொண்டர்கள் நல்லமுறையில்

முன்னேற்பாடுகளைச் செய்திருந்தார்கள். (Fortnightly Reports (Confidential) dated 6th October 1921) இராமநாதபுர மாவட்டத்திலும் கிலாஃபத் இயக்கம் காந்தி, சௌக்கத் அலி வருகைக்குப்பின் எழுச்சிபெற்றது.

கிலாஃபத் வேளையில் அரசியல் ஞானி அரங்கசாமி ஐயங்கார் அரும் பணியாற்றியதை ஆர்.கிருஷ்ணமாச்சாரியார் எழுதிய நூலில் பார்க்க முடிகிறது. இராஜாஜி அந்நூலுக்கு சிறப்புரை வழங்கினார். ஜி.சுப்பிரமணிய அய்யரும், ஜி.ஏ. நடேசனும், ஆக்கூர் அனந்தாச்சாரியும் சேலம் விஜயராகவாச்சாரியும் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். கிலாஃபத்திற்கு பிந்தைய காலங்களில் இவர்களது போக்கு மாறியது வரலாறு. என். சீனிவாச அய்யங்கார், அவரது மகள் எஸ். அம்புஜம்மாள் கிலாஃபத் காலத்தில் காந்திக்கு ஆதரவு தந்தவர்கள்.

ராஜாஜி (10.12.1878 – 25.12.1972)

1921இல் ராஜாஜி டிசம்பர் 21இல் கைது செய்யப்பட்டு சிறையேகினார். 20.3.1922 வரை சிறையில் வாடினார் ராஜாஜி. கிலாஃபத் போராட்டம் திட்டமிடப்பட்டபோது காந்தியிடம் ராஜாஜி, 'ஒரு மதத்தினர் மற்றொரு மதத்தினரைப் பொறுத்துக் கொண்டு போவது மட்டுமல்ல ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் சகோதர மதத்தினருக்காகப் போராடவே போகிறார்கள். இத்தகைய காட்சியை இந்தியா அளிக்க முடிகிறது. இது எவ்வளவு அழகானது! என்றார். "அசாத்திய அழகுதான் இல்லையா" என்று காந்தி பதிலளித்தபோது ராஜாஜியின் கண்கள் ஒளிர்ந்தன.

(ராஜாஜி வாழ்க்கை வரலாறு, ராஜ்மோகன் காந்தி, தமிழில் கல்கி ராஜேந்திரன், சென்னை 2012 பக்கம் 129)

திருநெல்வேலி

திருநெல்வேலியில் *21.7.1920, 22.7.1920*இல் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் அரசியல் மாநாட்டில் இராஜாஜியின் தீர்மானத்தை வெற்றிபெற உழைத்தவர்கள் கே.டி.எம். அகம்மது இப்ராகீமும், காயிதேமில்லத் இஸ்மாயில் சாகிபும். கிலாஃபத்தில் இந்து – முஸ்லிம் ஒற்றுமை வளர்ந்தது. சுதந்திர வேட்கையும் வளர்ந்தது. மாயவரத்தில் கிலாஃபத்தை

ஆதரித்து மௌலவி ஒருவர் பிரசுரங்களை வழங்கியுள்ளார். (G.O.No. 708, Public Confidental, dated 2 september 1922)

தஞ்சாவூரில் 300 முதல் 500 முஸ்லிம் இளைஞர்களைக் கொண்ட அமைப்பு கிலாஃபத்தின்போது அமைக்கப்பட்டது. (Non-Co-Operation and Khilafat Movements in the Madras Presidency (Confidential page 47) அய்யம்பேட்டை கா. அப்துல் கனி சாஹிப், பி.எஸ். வெங்கிடகிருஷ்ண பிள்ளை, த.அ.அப்துல் மஜித் சாகிப், கு.இ.முகம்மது காசீம் சாகிப், முகம்மது இப்ராகிம் சாகிப், கான்சாபுரம் ஸாலி ராவுத்தர், நா. இராமச்சந்திர அய்யர், சந்தைப்பேட்டை ந.உதுமான் கனி, லால்குடி முஹம்மது ஹயாத்கான் சாகிப், பாபுராஜபுரம் சி.அப்துல் சலாம், ரவணசமுத்திரம் டி.ஆர்.மகாதேவ அய்யர், பண்டாரவாடை செய்கு அப்துல்காதர் அலி சாகிப், அனுமந்தராவ், டி.ஏ.ராமச்சந்திர செட்டியார், திருவையாறு சி.சுப்பிரமணிய முதலியார், ஆ.அப்துல் மஜிது, செ.முகம்மது இப்ராகிம், கோ.அ. பக்கீர் முகம்மது கிலாஃபத்திற்காக உழைத்தவர்கள்.

1920 அக்டோபர் 20இல் சென்னை ஜாம்பஜாரில் இராஜாஜி கிலாஃபத்தை ஆதரித்துப் பேசினார். கூட்டத்தலைவர் சாகுல்ஹமீது. முஹம்மது வலியுல்லாஹ், ஹாஜி அப்துல் ரகீம், முகம்மது நத்தர் சாகிப் பள்ளிக்கூடங்களுக்கு மாணவர்களைச் செல்லவேண்டாம் என்று பிரச்சாரம் செய்தார்கள் என்று போலீஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

டி. அமீருத்தீன் சாகிபு, செய்யது அப்துல்காதர் ஜிலானி, தோல் வியாபாரி ஜமால் முஹம்மது, அப்பாஸ் ஹுசைன் ஆகியோர் கான்சாகிப் பட்டத்தை தூக்கி எறிந்தனர். மௌலவி ஹுசைன் சாகிபு 'ஷம்சுல் உலமா' என்ற ஆங்கிலேயர் அளித்த பட்டத்தை தூக்கி எறிந்தார்.

வள்ளல் ஹாஜி ஜமால் முகம்மது

ஜமால் முஹம்மதுவின் சகோதரர் ஜமால் இப்ராகிம் சாகிப் கௌரவ மாஜிஸ்டிரேட் பதவியை தூக்கி எறிந்தார். சென்னை பிரசிடென்சி கல்லூரி மாணவர் அப்துல் ரகுமான் மதரஸே ஆஸ்பத்திரியில் பயின்ற முஹ்யித்தீன் இருவரும் 6.11.1920இல் கல்லூரிப் படிப்பைத் தூக்கி எறிந்தனர்.

வடஆற்காடு மாவட்டத்தில் நீதிபதிகளாக பணியாற்றிய ஆதாம்கான், காசிம்கான், ரகுமான்கான், காசிம்பகதூர்,

மாதனூர் சந்தாமியான் சாயபு, கனி ஹாஜி அப்துல் ரசாக், வட ஆற்காடு திருப்பத்தூர் பீர்பால் நபியான் சாகிப் பகதூர், ஏ.கே.ரகீம் கான் சாயபு, குலாம் மொகிதீன் சாயபு, வாணியம்பாடி நாகூர் மீரான் சம்சுதீன் சாயபு, மதாகன் சந்தமியான் சாயபு ஆகியோர் மாஜிஸ்டிரேட் பதவிகளைத் துறந்தனர்.

பி.டி. சேஷாத்திரி ஆச்சாரியார், டி.எஸ். ஹரி செட்டியார், ஜமீன்தார் திருப்பத்தூர் ஆரணி ஏ.என். பரசுராம நாயக்கர், சட்டமன்ற உறுப்பினர் பதவிகளைத் துறந்தார்கள்.

எஸ்.வி. விஜயராகவாச்சாரியார், நாட்டேரி கிருஷ்ணமாச்சாரியார், வழக்கறிஞர் பதவியைவிட்டு விலகினார்கள். வக்கீல் தொழிலைப் பகிஷ்காரம் செய்வதென்ற திட்டத்தை பண்டித மோதிலால் நேருவும், சி.ஆர்.தாஸும் துவக்கி வைத்து மாபெரும் தியாகம் செய்தனர். (ஆர்.வேங்கடராமன், இந்திய விடுதலை இயக்க வரலாறு, சென்னை 1989 பக்கம் 91)

“கிலாஃபத்து இயக்கத்தைக் காங்கிரசு ஆதரித்தமையால் பல கூட்டங்களைக் கூட்டிப் பேசிக் கிலாஃபத்தை ஆதரித்து தீர்மானம் செய்தோம்; பல ஊர்வலம் நடத்தினோம். தொண்டை வலிக்க ‘அல்லாஹூ அக்பர்’ என்று உரக்கக் கத்தினோம். இந்து – முஸ்லிம் வேற்றுமையின்றி அந்த இயக்கத்திற்கு உழைத்தோம்” என்பார் வெ. துரையனார் அடிகள் (12.5.1891 – 5.1.1973) (மு. இளங்கோவன் பதிப்பித்த விடுதலைப் போராட்ட வீரர் வெ. துரையனார் அடிகள் தன் வரலாறு, 1995 பக்கம் 39)

விடுதலை வீரர் வேலூர் வி.டி. கண்ணப்ப முதலியார் ஒத்துழையாமை இயக்கத்தில் முழுமையாக தன்னை ஈடுபடுத்தினார். மேற்கண்டவர்களை ஆங்கில அரசு பல வகைகளிலும் துன்புறுத்தியது. (கவிமாமணி அறிவுச்சுடர், விடுதலை வீரர் வேலூர் வி.டி. கண்ணப்ப முதலியார் வாழ்க்கை வரலாறு, காட்பாடி, 1998, பக்கம் 83, 84)

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

வங்கத்துச் சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தனது ஐ.சி.எஸ். (I.C.S.) பதவியை ராஜினமா செய்தார். (என். ஸ்ரீநிவாசன், விடுதலைப் போரில் வியப்பூட்டும் நிகழ்ச்சிகள், சென்னை, 2000, தொகுதி 2 பக்கம் 347)

900 உலமாக்கள்

ஜமாஅத்துல் உலமா இ ஹிந்த் தேர்தலைப் புறக்கணித்தது. பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், சட்டம் – நீதிமன்றங்களை துறந்தது. அந்தப் பதவிகளைத் தூக்கிஎறிந்து 900 உலமாக்கள் வீரத்துடன் வெள்ளையராட்சியை எதிர்த்துக் கையெழுத்திட்டனர். (Tarachand History of the Freedom Movement in India Volume III, New Delhi, 1983, page 490)

1919 – 1920 இல் இந்தியா முழுவதும் கிலாஃபத் இயக்கத்தின்போது கல்லூரிப் படிப்பைத் துறந்தவர்கள் 52,482 பேர்கள். 1921 – 1922ஆம் ஆண்டில் கல்லூரிப் படிப்பைத் துறந்தவர்கள் 45,933 பேர்கள்.

1919 – 1920ஆம் ஆண்டில் கிலாஃபத் காலத்தில் பள்ளிக்கூடப் படிப்பை இந்தியா முழுவதும் துறந்தவர்கள் 12,81,810 பேர்கள். 1921–1922ஆம் ஆண்டில் பள்ளிக்கூடப் படிப்புகளைத் துறந்தவர்கள் 12,39,524 பேர்கள். (P.C. Bamford,Histories of the Non- Co- Operatation and Khilafat Movement Page 103)

இதழ்களின் பணி

இந்நாட்டு விடுதலையில் தி ஹிந்து, சுதேசமித்திரன், தேசபக்தன், நவசக்தி, தமிழ்நாடு, தஞ்சாவூர் வர்த்தகமித்திரன், காரைக்குடி வைசியமித்திரன், குவாமி ரிப்போர்ட் (Qaumi Report) சுயராஜ்யா, சைபுல் இஸ்லாம், ஹிந்துநேசன் ஆகிய பத்திரிக்கைகள் 1921இல் கிலாஃபத்தின்போது பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கருப்புப் பட்டியலில் இருந்தது. (National Archives of India, New Delhi, Home Poll. 188/IV/1922. மேற்கோள் A. Ganesan, The press in Tamilnadu and the struggle for freedom 1917-1937 Delhi, 1988, Page 94)

தி ஹிந்து THE HINDU

ஹிந்து பத்திரிகை 1916இல் 5000, 1917இல் 6400, 1918இல் 7,200, 1919இல் 9,700, 1920இல் 10,500, 1921இல் 13,500 ஆக விற்பனை அதிகரித்தது கிலாஃபத் எழுச்சிக்கு அடையாளம். (Tamil Nadu Archives (Chennai) Annual News paper Reports 1916-1921)

இந்திய அரசாங்கம் தொகுத்த Who's who of Indian Martyrs மூன்று தொகுதிகள், அதுபோல் தமிழக அரசு வெளியிட்ட

Who's who of Freedom Fighters மூன்று தொகுதிகள், தோழர் ஸ்டாலின் குணசேகரன் தொகுத்த விடுதலைவேள்வியில் தமிழகம் இரு தொகுதிகள். இவைகளை வாசித்தறியும்போது மேலும் பல செய்திகள் கிடைக்கக்கூடும்!

கடல்போன்ற தலைப்பை கண்ணாடிச் சிமிழுக்குள் கொண்டுவரும் முயற்சியாக இக்கட்டுரை இருக்கும் தமிழகத்தில் கிலாஃபத் இயக்கம் ஒரு சிறு பகுதியைத்தான் தொட்டுள்ளேன்; இன்னும் உள்ளது. காலம் வாய்ப்பளிக்கும்போது எழுதுகிறேன். அபிநவபாரத சபா, அனுஷியான்சமிதி, இந்திய தேசிய குடியரசு ராணுவம், சந்தால் இயக்கம், வகாபியர் எழுச்சி இயக்கம், இளம் வங்காளிகள் இயக்கம், பாரத மாதா சங்கம், மித்ரமேளா, கத்தர் கட்சி, செஞ்சட்டை வீரர்கள் சங்கம், பராசி இயக்கம், இந்து மேளா, இண்டியன் அசோசியேசன், அபிநவபாரத் சமிதி, பாரிஸ் இந்தியா கழகம், பெர்லின் கமிட்டி, கிலாஃபத் இயக்கம், யுகாந்தர் இயக்கம், மாப்பிள்ளைமார் எழுச்சி இயக்கம், நமீப்பா எழுச்சி இயக்கம், ஸ்வராஜ்யக்கட்சி, இந்தியன் ரிபப்ளிகின் ஆர்மி, இந்திய தேசிய இராணுவம், அகில இந்திய முஸ்லிம் லீக், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ் இப்படி பல்வேறு அமைப்புகளும் இயக்கங்களும் போராடியதின் விளைவாகப் பெற்றது இந்திய சுதந்திரம். பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காப்போம், வீட்டை மறந்து, நாட்டை நினைத்து தங்களை மெழுகுவர்த்திகளாக்கிக்கொண்டு இந்திய நாட்டிற்கு சுதந்திரம் ஈட்டித் தந்த பெருமைக்குரிய பெரியார்களின் நினைவை என்றென்றும் போற்றுவோமாக!

அறிவின் ஊற்றாகவும் சிந்தனைக்கு விருந்தாகவும் திகழும்

இலக்கியச்சோலை

சுதந்திரப் போராட்ட வரலாற்று நூல் வரிசை

1. விடுதலைப்போரில் தமிழக முஸ்லிம்கள்

ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியாவை சுதந்திர இந்தியாவாகத் திகழ பெரும் பெரும் தியாகங்கள் செய்ய வேண்டியிருந்தது. இதற்காக பல புரட்சிகள் ஏற்பட்டன. எண்ணற்ற முஸ்லிம்கள் பிரிட்டிஷாரால் குண்டுகள் வீசியும், பீரங்கிகளால் தாக்கியும் அழிக்கப்பட்டார்கள். பல்லாயிர மக்கள் சிறைக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு, பலர் சிறைச் சாலைகளில் தூக்கிலிடப்பட்டார்கள்; தமிழகத்தில் முஸ்லிம்கள் செய்த தியாகங்கள் கணக்கிலடங்காது.

நாடு சுதந்திரம் பெறுவதற்கு முஸ்லிம்கள் செய்த மிகப்பெரும் தியாகங்களை தமக்கு கிடைத்த தகவல்களை ஆதாரமாகக் கொண்டு வரலாற்றாய்வாளர் செ. திவான் இந்த நூலை தந்துள்ளார்.

முஸ்லிம்களை தேச துரோகிகளாக சித்தரிக்கப்பட்டு வரும் இக்காலகட்டத்தில் இச்சமுதாயத்தின் தன்மானத்தை, கௌரவத்தை, தேசப்பற்றை உலகறிய வெளிச்சம் போட்டுக் காட்டும் மகத்தான வரலாற்று நூல் விடுதலைப்போரில் தமிழக முஸ்லிம்கள்.

2. மாப்பிளா முஸ்லிம்கள்

1498ஆம் ஆண்டு மே திங்கள் 20ம் தேதி போர்ச்சுகீசிய கடற்படை தளபதி வாஸ்கோ டகாமா மலபார் கரையை வந்தடைந்த போதே இந்தியாவில் காலனியாதிக்கத்திற்கு எதிரான முதல் போரை மலபார் மாப்பிளா முஸ்லிம்கள் துவங்கினர். ஒருபுறம் மாப்பிளாக்கள் ஒரே நேரத்தில் அந்நிய ஆதிக்க சக்திகளுக்கு எதிராகவும், மறுபுறம் மலபாரில் நிலவிய சாதியக் கொடுமைகளுக்கு எதிராகவும்,

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராகவும், அவர்களின் விடுதலைக்காகவும் போராட்டம் என்று அவர்களின் வாழ்வே போராட்டத்திலும், தியாகத்திலும் கழிந்தன. "வீர மரணம்" அடைவதை போரின் ஒருமரபாக தங்களின் கலாச்சாரமாக பின்பற்றிய சமூகமாக மாப்பிளாக்கள் இருக்கின்றனர். அவர்களின் போராட்டம் பல நூற்றாண்டுகளை கடந்தும் நடைபெற்றது. அத்தகு மாப்பிளாக்களின் வரலாறு, வீரம், தியாகம் குறித்து ஆதாரப்பூர்வமான முழு ஆய்வே இந்நூலாகும்.

3. இந்திய சுதந்திரப்போரில் இரு சகோதரர்கள்

மௌலானா முஹம்மது அலி சிறந்த பத்திரிகையாளர் என்பது நிச்சயம் பலருக்கும் புதிய தகவலாகத்தான் இருக்கும். இதுபோன்ற பல சுவாரஸ்யமான செய்திகள் விரிவாகவே இந்த நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம்களின் அடையாளங்கள் இடங்களின் பெயர்களிலும், சாலைகளின் பெயர்களிலும் இருக்கக் கூடாது என்று கட்டுக்கடங்காத மதவெறி கொண்ட கும்பல் ஆட்சியில் அமர்ந்து வரலாற்றை மறைப்பதிலும் திரிப்பதிலும் மும்முரமாக செயல்பட்டு வரும் சூழலில், அலி சகோதரர்களின் வரலாற்றை அறிந்து கொள்வது இந்தியர்களின் கடமையாகும்.

4. தமிழகத்தில் கிலாஃபத் இயக்கம்

1920 ஆம் ஆண்டில் தொடக்க மாதங்களில் வெவ்வேறு கிலாபத் மாநாடுகளிலும் கோபாவேசமான சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டன. பிரிட்டிசாருக்கு எதிராக ஜிஹாத் (புனிதப்போர்) தொடுக்கப்போவதாக பேச்சுக்கள் அடிப்பட்டன. *1920*ஆம் ஆண்டின் காலகட்டத்தில் கிலாபத் இயக்கம் பிரிட்டீஷ் அரசுக்கு தொடர்ந்து அதிகரித்து வரும் ஆபத்தாக இருந்தது.

- P.C.Bamford

1920 ஆம் ஆண்டில் தொடக்க மாதங்களில் வெவ்வேறு கிலாபத் மாநாடுகளிலும் கோபாவேசமான சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டன. பிரிட்டிசாருக்கு எதிராக ஜிஹாத் (புனிதப்போர்) தொடுக்கப்போவதாக பேச்சுக்கள் அடிப்பட்டன. 1920ஆம் ஆண்டின் காலகட்டத்தில் கிலாபத் இயக்கம் பிரிட்டீஷ் அரசுக்கு தொடர்ந்து அதிகரித்து வரும் ஆபத்தாக இருந்தது.

- P.C.Bamford

ILAKKIYACHOLAI
இலக்கியச்சோலை

₹ 25.00